# BSNLஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

*சுற்றறிக்கை எண்:91* *தேதி:-12.09.2011*

## தொழிலாளர்களின் தேசிய கருத்தரங்கம்

அன்பார்ந்த தோழர்களே!

2011, செப்டம்பர் 7 அன்று புது டெல்லி மாவலங்கர் ஹாலில் நடைபெற்ற தொழிலாளர்களின் தேசிய கருத்தரங்கம், மத்திய அரசாங்கத்தின் தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரான கொள்கைகளுக்கு எதிராக தொடர்ந்து போராட அறைகூவல் விடுத்துள்ளது. அதன் ஒரு பகுதியாக 2011, நவம்பர் 8ஆம் தேதி அனைத்து மாநில தலைநகர்கள் மற்றும் தொழில் மையங்களிலும் சத்தியாகிரக/சிறை நிரப்பும்/மறியல் போராட்டங்களுக்கு திட்டமிட வேண்டும் எனவும் அறைகூவல் விடுத்துள்ளது. மத்திய தொழிற்சங்கங்கள் அறைகூவல் விடுத்து கோடிக்கணக்கான தொழிலாளர்கள் பங்கேற்ற வரலாற்று சிறப்புமிக்க 2010 செப்டம்பர் 7ஆம் தேதியின் ஒரு வருட நிறைவு நாளில் இந்தக் கருத்தரங்கம் நடைபெற்றது பொருத்தமான நிகழ்வாக இருந்தது.

BMS, INTUC, CITU, AITUC, HMS, AIUTUC, AICCTU, UTUC, TUCC, LPF மற்றும் SEWA ஆகிய 11 மத்திய தொழிற்சங்கங்கள் இந்த கருத்தரங்கத்திற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். மத்திய தொழிற்சங்கங்கள், மத்திய மாநில அரசு ஊழியர்களின் சம்மேளனங்கள் மற்றும் வங்கி, காப்பீடு, BSNL மற்றும் பிற பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்கள் என நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் குவிந்த சார்பாளர்களால் மாவலங்கர் ஹால் நிரம்பி வழிந்தது. 1500க்கும் மேற்பட்ட தோழர்கள் இதில் கலந்துக் கொண்டனர். BSNL ஊழியர் சங்கத்தின் சார்பில் அகில இந்திய தலைவர் தோழர் VAN.நம்பூதிரி இதில் பங்கேற்றார்.

தோழர்A.K.பத்மநாபன்(CITU) மற்றும் மற்ற மத்திய தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவ படுத்தும் தோழர்களை உள்ளடக்கிய தலைமைக் குழு இந்த கருத்தரங்கை தலைமை ஏற்று நடத்தியது. கோரிக்கைகள் மற்றும் நாம் நடத்த வேண்டிய எதிர்கால இயக்கங்கள் தொடர்பான தீர்மானத்தை INTUC தலைவர் Dr.சஞ்சீவரெட்டி முன்மொழிய BMS தலைவர் திரு.பவன்குமார் வழிமொழிந்தார். தோழர்கள் தபன் சென் (CITU), குருதாஸ் தாஸ் குப்தா (AITUC), உம்ரோமல் புரொஹித் (HMS), கிருஷ்ண சக்ரவர்த்தி (AIUTUC), சபன் முகர்ஜி (AICCTU), S.P.திவாரி (UTUC), அபானி ராய் (TUCC) மற்றும் M.சண்முகம் (LPF) ஆகியோர் தீர்மானத்தை ஆதரித்து பேசினார்கள். இதற்கு பின் அந்த தீர்மானம் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

# ***கோரிக்கைகள்:-***

**01. விலைவாசியை குறைக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.**

**02. வேலை வாய்ப்பு உருவாக்கம் தொடர்பான உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.**

**03. தொழிலாளர் நலச் சட்டங்கள் உறுதியாக அமுல் படுத்தப்பட வேண்டும்.**

**04. அணி திரட்டப்படாத தொழிலாளர்களுக்கு ஒட்டுமொத்த சமூக பாதுகாப்பு கவசம் உருவாக்கப்பட வேண்டும்.**

**05. மத்திய மாநில பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு விற்பனையை தடுத்து நிறுத்த வேண்டும்.**

**06. ஒப்பந்த முறை ஒழிக்கப்பட வேண்டும்.**

**07. ரூ.10,000க்கும் குறைவில்லாத சட்டபூர்வ குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப் பட வேண்டும்.**

**08. அனைவருக்கும் ஓய்வூதியம் உறுதி செய்யப்பட வேண்டும்.**

**09. போனஸ் மற்றும் வைப்பு நிதிகளுக்கு தற்போதுள்ள தகுதி உச்ச வரம்பு மற்றும் தொகை உச்ச வரம்பு ஆகியவற்றை முற்றிலும் நீக்க வேண்டும்.**

**10. தொழிற்சங்கங்களை கட்டாயமாக 45 நாட்களுக்கும் பதிவு செய்ய வேண்டும் மற்றும் ILO வின் 87 மற்றும் 98ஆவது கருத்தரங்களின் முடிவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தவும், அதே போல எதிர்கால ஒன்று பட்ட இதைவிட பெரிய போராட்டங்களை நடத்த தயார் படுத்தவும் இந்த அகில இந்திய கருத்தரங்கம், ***2011, நவம்பர் 8ஆம் தேதியன்று அனைத்து மாநில தலைநகர்களிலும், தொழில் மையங்களிலும் சத்தியாகிரகம்/ சிறை நிரப்பும்/ மறியல் உள்ளிட்ட போராட்டங்களை நடத்த*** அறைகூவல் விடுத்துள்ளது. இந்த திட்டங்களை அமுல் படுத்தவும், அடுத்த கட்டத்தில் வெகு விரைவில் ஒரு அகில் இந்திய பொது வேலை நிறுத்தத்தை நடத்த திட்டமிடவும் மாநில மட்ட கருத்தரங்களை நடத்திட வேண்டும் என அனைத்து அமைப்புகளையும் இந்த கருத்தரங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

'தொழிலாளி வர்க்க ஒற்றுமை ஓங்குக', 'புரட்சி ஓங்குக' ஆகிய முழக்கங்களோடு முடிவடைந்த அந்த கருத்தரங்கத்தின் முடிவுகளை நாம் சிறப்புடன் நிறைவேற்றிடுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**S.செல்லப்பா**
**மாநில செயலாளர்**